

கலைஞர் 100
1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 147 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மார்கழி 21 – ஞாயிற்றுக்கிழமை 05 ஜனவரி 2025 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 147 : Thiruvalluvar Year - 2055 - Margazhi 21 - Sunday 05 January 2025 - Madurai 16 Pages ₹ 5.00


### இந்து சமய அறநிலையத் துறை சார்பில் - அனைத்துலக

# முத்தமிழ் முருகன் மாநாட்டு மலர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.1.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் கடந்த ஆண்டு ஆகஸ்ட் 24 மற்றும் 25 தேதிகளில் பழனியில் நடைபெற்ற அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டையொட்டி தயாரிக்கப்பட்ட அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு – பழனி 2024 சிறப்பு மலரினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தவத்திரு திருவண்ணாமலை ஆதீனம் பொன்னம்பல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், திருமதி சி.ஹரிப்ரியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சென்னை, ஜன. 5 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.1.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் கடந்த ஆண்டு ஆகஸ்ட் 24 மற்றும் 25 தேதிகளில் பழனியில் நடைபெற்ற அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டையொட்டி தயாரிக்கப்பட்ட அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு பழனி 2024 சிறப்பு மலரினை வெளியிட்டார்.**

தமிழ்க் கடவுளான முருகப்பெருமானின் பெருமையை உலகெங்கிலும் உள்ள முருகபக்தர்கள் அறிந்து கொள்ளும் வகையில் அறுபடை வீடுகளில் ஒன்றான பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு நடத்திட முடிவு செய்யப்பட்டு, அதன்படி, 2024 ஆகஸ்ட் 24 மற்றும் 25 ஆகிய தேதிகளில் பழனியில் இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து முக்கியப் பிரமுகர்கள், முருக பக்தர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

**முத்தாய்ப்பாக அமைந்த மாநாடு!**

இந்து சமய அறநிலையத்துறையின் வரலாற்றில் இம்மாநாடு முத்தாய்ப்பாக அமைந்ததோடு, தமிழ் கடவுளாம் முருகப் பெருமானின் பெருமைகளை மென்மேலும் பறைசாற்றி, உலகெங்கும் உள்ள முருக பக்தர்கள் பெருமையும், பேருவுவகையும் கொள்ளச் செய்யும் வகையில் சிறப்பாக நடைபெற்றது.

அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில மாண்பமை உயர்நீதிமன்ற நீதியரசர்கள் ஆற்றிய உரைகள், தவத்திரு ஆதீனங்களின் ஆசி உரைகள், வெளிநாட்டினரின் கட்டுரைகள், விருது பெற்றவர்களின் சிறப்புகள், ஆய்வரங்கத்தில் வாசித்ததில் சிறந்த கட்டுரைகள், பேச்சாளர்களின் வாழ்த்துரைகள் ஆகியவற்றை உள்ளடக்கி மாநாட்டின் நிகழ்வு குறித்த வண்ணப் புகைப் படங்களுடன் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு - பழனி 2024 சிறப்பு மலர் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தவத்திரு திருவண்ணாமலை ஆதீனம் பொன்னம்பல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், திருமதி சி.ஹரிப்ரியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

### பா.ஜ.க.வின் சுயநலத்தால் மணிப்பூர் மாநிலம் பற்றி எரிகிறது!

## அரசியலமைப்புக் குற்றத்திலிருந்து தப்ப முடியாது!

### பிரதமர் மோடிக்கு கார்கே எச்சரிக்கை!



*புதுடெல்லி, ஜன. 5 -*

ஒன்றரை ஆண்டுகளாக பற்றி எரியும் மணிப்பூருக்குச் செல்லாத பிரதமர் மோடி, அரசியலமைப்பு குற்றத்திலிருந்து ஒருபோதும் தப்பிக்க முடியாது என, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கடுமையாக சாடியுள்ளார்.

பா.ஜ.க. ஆட்சி நடைபெறும் மணிப்பூரில் மீண்டும் வன்முறை அரங்கேறியுள்ளது. காங்போக்பி மாவட்டத்தில் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்தால் அங்கு பதற்றம் நிலவி வருகிறது.

இதுதொடர்பாக பிரதமர் மோடிக்கு அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பி காங்கிரஸ் தலைவர் கார்கே சமூக வலைதளப்பதிவில் விளக்கமாக பதிவிட்டுள்ளார்.

அதில், கடந்த 2020 ஆம் ஆண்டு ஜனவரியில் பா.ஜ.க.வுக்கு தேர்தல் பிரச்சாரத்துக்காக மணிப்பூருக்கு பிரதமர் மோடி கடைசியாக சென்றதை கார்கே குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், அதன் பிறகு 2023 ஆம் ஆண்டு மே மாதம் 3-ஆம் தேதி மணிப்பூரில் அரங்கேறிய வன்முறை சம்பவங்கள் 600 நாட்களுக்கு மேலாகி விட்டது. பல்வேறு கிராமங்கள் அழிக்கப்பட்டுள்ளதை செயற்கைகோள் படங்கள் தெளிவாக காட்டுவதாக கார்கே கூறியுள்ளார்.

250க்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் உயிரிழப்பு, 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ள நிலையில், பா.ஜ.க.வின் சுயநலத்தால் மணிப்பூர் மாநிலம் இன்னும் பற்றி எரிந்து கொண்டிருப்பதாக கார்கே வேதனையுடன் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா கூட்டணிக் கட்சிகள் பிரதமர் மோடிக்கு கடந்த டிசம்பர் 6 ஆம் தேதி கேட்கப்பட்ட கேள்விகளை தனது சமூக வலைதளப்பதிவில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2024 ஆம் ஆண்டு டிசம்பருக்குள் மணிப்பூருக்குச் செல்லுமாறு கூறினோம், ஆனால் நீங்கள் செல்லவில்லை.

மணிப்பூர் விவகாரம் தொடர்பாக, டெல்லியில் அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை அழைத்து பேசுமாறு கூறியதையும் ஏற்கவில்லை. மணிப்பூருக்கு நேரடியாகச் சென்று அங்குள்ள மக்களை நேரில் சந்திக்குமாறு வலியுறுத்தியதையும் செயல்படுத்தவில்லை என்று பிரதமர் மோடியை கார்கே விமர்சித்துள்ளார்.

இவற்றில் எதையுமே செய்யாத பிரதமர் மோடி அரசியலமைப்பு குற்றத்திலிருந்து ஒருபோதும் தப்பிக்க முடியாது என்று கூறியுள்ள காங்கிரஸ் தலைவர் கார்கே, மணிப்பூரை எரிக்கும் தீக்குச்சியாகவே பா.ஜ.க. உள்ளதாகவும் காட்டமாக விமர்சித்துள்ளார்.

---

### ஒன்றிய அரசு

## கல்வித்துறைக்கு அதிக நிதி ஒதுக்கவேண்டும்!

### ராகுல்காந்தி வலியுறுத்தல்!



*புதுடெல்லி, ஜன. 5 -*

கல்வித்துறைக்கு ஒன்றிய அரசு அதிக நிதி ஒதுக்கவேண்டும் என, மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் ராகுல் காந்தி வலியுறுத்தியுள்ளார்.

மக்களவை எதிர்க் கட்சித்தலைவர் ராகுல் காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், “நாட்டு மக்களுக்கு தரமான கல்விக்கு உத்தரவாதம் அளிப்பது என்பது ஒவ்வொரு அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பாகும்” என்று கூறியுள்ளார்.

தனியார் மயமாக்குதல் மற்றும் நிதியுதவி அளிப்பது மூலம் இந்த இலக்கை ஒருபோதும் அடைய முடியாது என்றும் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

கல்வித் துறைக்கு ஒன்றிய அரசு முக்கியத்துவம் அளித்து அதிகமான நிதியை ஒதுக்க வேண்டும் என்றும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

### விருதுநகர் மாவட்ட பட்டாசு ஆலையில் வெடி விபத்து!

## உயிரிழந்த 6 பேரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.4 லட்சம் நிதி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜன. 5 -**

**விருதுநகர் மாவட்டம், கோட்டையூர் கிராமத்தில் இயங்கிவரும் தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

*விருதுநகர் மாவட்டம் மற்றும் வட்டம் கோட்டையூர் கிராமத்தில் செயல்பட்டுவரும் தனியார் பட்டாசு ஆலையில் நேற்று (4.1.2025) காலையில் மருந்து கலக்கும் அறையில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் அருப்புக்கோட்டையைச் சேர்ந்த சிவகுமார் (வயது 56) த/பெ. சிவசுப்பிரமணியன், குருந்தமடத்தைச் சேர்ந்த வேல்முருகன் (வயது 54) த/பெ. கோபால் மற்றும் காமராஜ் (வயது 54) த/பெ. சுப்பு, வீரார்பட்டியைச் சேர்ந்த கண்ணன் (வயது 54) த/பெ. ராமசாமி, அருப்புக்கோட்டையைச் சேர்ந்த மீனாட்சி சுந்தரம் (வயது 46) த/பெ.சக்திவேல், செட்டிக் குறிச்சியைச் சேர்ந்த நாகராஜ் (வயது 37) த/பெ. ராஜாமணி ஆகிய 6 நபர்கள் உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.*

*இவ்விபத்தில் காயமடைந்து மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் ஆவுடையாபுரத்தைச் சேர்ந்த முகமது சுதீன் என்பவருக்கு சிறப்பு சிகிச்சையளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.*

*இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா நான்கு இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.*

*இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.*

---

### ‘இஸ்ரோ’ அனுப்பிய

## பி.எஸ்.எல்.வி. சி60 ராக்கெட் செயல்படத் தொடங்கியது!



ஸ்ரீஹரிகோட்டா, ஜன. 5 –

இஸ்ரோ அனுப்பிய ரோபோட்டிக் கரங்கள் விண்வெளியில் செயல்பாட்டை தொடங்கியுள்ளதாக வீடியோ வெளியிடப்பட்டுள்ளது.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டா சதீஷ் தவான் ஏவுதளத்தில் இருந்து கடந்த 30ம் தேதி பி.எஸ்.எல்.வி. சி60 ராக்கெட் மூலம் ஸ்பேடெக்ஸ் ஏ, ஸ்பேடெக்ஸ் பி செயற்கைக்கோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டன.

பின்னர் 2 செயற்கைக் கோள்களும் 355 கிலோ மீட்டர் உயரத்தில் புவி சுற்றுவட்ட பாதையில் நிலை நிறுத்தப்பட்டது. இந்த 2 செயற்கைக்கோள்களும், ஒரே புவி வட்ட பாதையில் குறிப்பிட்ட இடைவெளிகளில் பயணித்து வந்தன.

இந்த நிலையில், 2 செயற்கைக்கோள்களும் 2 கிலோ மீட்டர் இடைவெளியில் உள்ளதாக இஸ்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த 2 கிலோ மீட்டர் தொலைவும் சிறிது சிறிதாக குறைக்கப்பட்டு, அடுத்தகட்டமாக ஸ்பேடெக்ஸ் ஏ, ஸ்பேடெக்ஸ் பி ஆகிய இரண்டு செயற்கைக்கோள்களையும் டாக்கிங் முறையில் ஒருங்கிணைக்கும் பணி வரும் 7ம் தேதி நடைபெறுகிறது.

இதனிடையே, இஸ்ரோ வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், பி.எஸ்.எல்.வி. சி60 ராக்கெட்டில் அனுப்பப்பட்ட ரோபோட்டிக் கரங்கள் செயல்பாட்டை சிறப்புற தொடங்கியுள்ளதாக தெரிவித்துள்ளது. எதிர்கால விண்வெளி திட்டங்களுக்கு ரோபோட்டிக் கரங்கள் ஆதாரமாக திகழும் என இஸ்ரோ தனது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளது.